(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 42 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, நவெம்பர் 15, சனிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0115 / ’08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அமைக்கப்பட்ட திகதி எது என்பதையும்,

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்கள் யார் என்பதையும், அவர்களை நியமிப்பதில் பயன்படுத்தப்படும் வழிமுறையையும்,

(iii) பல்கலைக்கழகங்களுக்கான பாடத்திட்டத்தை தயாரித்தவர் யார் என்பதையும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட அடிப்படையையும்,

(iv) மாணவர்கள் பட்டப்படிப்பை தொடர்வதற்காக பாடங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 05 வருடங்களில் பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பட்டங்களின் பெயர்கள் எவை என்பதையும்,

(ii) கடந்த 05 வருடங்களில், பல்கலைக்கழக அடிப்படையில் ஒவ்வொரு பட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்,

(iii) அப்பட்டங்களுக்கு மாணவர்களை ஒதுக்கப் பயன்படுத்தப்படும் அளவுகோல் என்ன என்பதையும்,

(iv) நாட்டின் தேவையைப் பொறுத்து கற்கை நெறிகளை ஒதுக்கும் ஏதாவது அரச நிறுவனத்திற்கும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் இடையில் தொடர்பு உள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறில்லையாயின், பயன்படுத்தப்படும் அடிப்படை என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0116 / ’08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசிற்குச் சொந்தமான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையையும்,

(ii) மாகாணம், மாவட்டம், தேர்தல் தொகுதி ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினதும் அமைவிடங்களையும்,

(iii) இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் எவையேனும் இயங்கு கின்றனவா என்பதையும்,

(iv) அவ்வாறாயின் அவற்றின் பெயர்களையும் அங்குள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(v) அவை உள்நாட்டு பட்டங்களையா அல்லது வெளிநாட்டு பட்டங்களையா வழங்குகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் கடந்த ஆறு வருடங்களிலே காணப்பட்ட கல்வி நாட்களின் எண்ணிக்கையையும்,

(ii) கடந்த ஆறு வருடங்களில் எந்தப் பணிநிறுத்தமும் இன்றி இயங்கியிருந்தால் நாட்கள் குறித்த ஒரு ஒப்பீட்டையும்,

(iii) கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் மாணவர்களின் பொதுவான தினவரவை வருடாந்த அடிப்படையிலும்,

(iv) பகிடிவதை அபாயகரமானதான நிலையிலும் மனிதநேயமற்றதாகவும் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்ட பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யையும்,

(v) இது சம்பந்தமாக முடிவடைந்த, முடிவடையாத வழக்குகளின் எண்ணிக்கை கடந்த இரண்டு வருடங்களுக்கு தனித்தனியாகவும்

பீட வாரியாக அவர் தெரிவிப்பாரா?

(இ) கடந்த மூன்று வருடங்களில்,

(i) இப்பல்கலைக்கழகங்களின் உரிய பீடங்களினால், நிறைவேற்றப்படும் சுயநிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கையையும்,

(ii) சேகரிக்கப்பட்ட தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) வெளிநாட்டு புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுக்கு கற்றல் விடுவிப்பில் சென்ற 25 பேராசிரியர்கள் / விரிவுரையாளர்கள் / பீடாதிபதிகளின் பெயர்களை அவர்கள் சென்ற கற்றல் விடுவிப்புச் செயற்பாட்டுடன் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0117/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'கிழக்கின் உதயம்' ஆரம்பிக்கப்பட்ட திகதி என்ன என்பதையும்,

(ii) ஆறு மாதங்களில் பூர்த்தி செய்யவென எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்டங் களின் முன்னேற்றம் எவ்வாறுள்ளது என்பதையும்,

(iii) 'கிழக்கின் உதயம்' கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம், செலவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்,

(iv) எந்த நோக்கத்திற்கு செலவளிக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அதற்காக செலவளிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்,

(iii) இன்னும் பல வீடுகள் கட்டிமுடிக்க வேண்டியுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், இதனைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கும் திகதி என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0234/ '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— இளைஞர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் அலுவல்கள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0235/ '08

5.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர்கல்வி (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0236/ '08

6.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால், தொலைத் தொடர்புகள் (அமைச்சரவை) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது அரசாங்க உடமையா என்பதையும்,

(iii) அரசாங்க உடமை இல்லையெனில், எந்த அடிப்படையில் அவ்விடுதி வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ விடுதியொன்று வழங்கப்பட்டிருப்பின், அது 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டு அல்லது மேம்படுத்தப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) திருத்தப்பட்டிருப்பின் மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி விடுதியின் பாவனைக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செலவில் தளபாடங்கள் அல்லது வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) ஆமெனில், செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் வெவ்வேறாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிக்காக 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள மின்சாரம் மற்றும் நீர் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0576/ '08

7.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபையில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்,

(iii) கொழும்பு மாநகர சபையில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு மாநகர சபையில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது கடமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0577/ '08

8.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்,

(iii) கொழும்பு பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு பிரதேச செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது கடமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0578/ '08

9.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்,

(iii) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற நிறைவேற்று அதிகார தரத்தைச் சேராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவர்களது பதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் தமிழ் மொழி மூலமாக கடமையாற்றுகின்ற ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது கடமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0583/ '08

10.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சைக்குரிய பாடப் புத்தகங்கள் உரிய வகையில் பாடசாலைகளுக்கு வழங்கப் பட்டுள்ளனவா,

(ii) அவ்வாறு வழங்காவிட்டால், அதன் காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்படி பாடப்புத்தகங்களை பாடசாலைகளுக்கு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) 2008 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சை வினாத்தாள்களைத் தயார் செய்கின்ற போது இப்பாடப் புத்தகங்களின் தாமதம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா,

(ii) சிங்கள இலக்கிய பாடப்புத்தகத்தில் 14 பாடங்களில் முதல் 7 பாடங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வினாத்தாள்களைத் தயாரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா,

(iii) இக்குறைபாட்டுக்கு அடிப்படையாகப் பொறுப்புக்கூற வேண்டியது யார்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0584/ '08

11.

கௌரவ விஜித ரணவீர,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டத்திற்காக சுவீகரிப்பதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ள காணிகளின் அளவும் அதற்கான இழப்பீடுகளாக மதிப்பிடப் பட்டுள்ள தொகையும் எவ்வளவென்பதையும்,

(ii) இற்றைவரை அதற்காக வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத்தொகை எவ்வள வென்பதையும்,

(iii) இழப்பீடு வழங்கப்படும் நடைமுறை யாதென்பதையும்,

(iv) மேலும் இழப்பீடு செலுத்தப்பட வேண்டியவர்கள் உள்ளனரா என்பதையும்,

(v) ஆமெனில், அதற்கான தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0586/ '08

12.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரூபா 157 விலையுள்ள ஒரு லீற்றர் பெற்றோலுக்கு அரசாங்கம் விதிக்கின்ற அனைத்து விதமான வரிகளும் எவ்வளவென்பதையும்,

(ii) ஒரு லீற்றர் பெற்றோலினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திற்கு கிடைக்கப்பெறும் இலாபம் எவ்வளவென்பதையும்,

(iii) அதன்படி, எரிபொருள் விலை அதிகரிப்பினால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்காதிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0758 / '08

13.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, பெந்தர சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையி லுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பன வுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பெந்தர சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக்குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0759 / '08

14.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, பலப்பிட்டி சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பலப்பிட்டி சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக்குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

0760 / ‘08

15.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, ஹிக்கடுவ சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஹிக்கடுவ சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக்குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல் ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 70(2) ஆம் நிலையியற் கட்டளை மற்றும் 2008.10.24 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை ஆகியவற்றினால் தடைபெறாமல் இன்றையதினம் பாராளுமன்ற அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2009) — (ஒதுக்கப்பட்ட ஏழாம் நாள்) - விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (நவெம்பர் 06) [1].

* 2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது. எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515—12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் 58,915 ரூபா சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து 58,915 ரூபா மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உப தவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உப தவிசாளர்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறபட்டுள்ளது.)

* 11.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 14.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

* 20.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 22.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 23.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 24.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 25.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

* 26.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

* 27.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

* 28.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

* 29.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

30.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

உலக பௌத்த மகா சம்மேளனத்தின் இலங்கைப் பிரதேச நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.